பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி உதவி இயக்குநரின் (மின் ஆளுமை) செயல்முறைகள், சென்னை– 06.

ஓ.மு.எண். 82790 /வி2/இ2/2025, நாள். 08.01.2026

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 – இன் கீழ் தகவல்கள் கோரியுள்ளது – தொடர்பாக. |
| பார்வை | திருப்பூர் மாவட்டம் , திரு சூரியபிரகாஷ் என்பவரிடமிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 –இன் கீழ் பெறப்பட்ட தகவல்கள் கோரும் 19.12.2025 நாளிட்ட இணையவழி மேல்முறையீட்டு மனு எண். TNDSE/A/2025/60057. |

---------------

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 இன் கீழ் திருப்பூர் மாவட்டம் , திரு சூரிய பிரகாஷ் என்பார் 2017–2018 ஆம் கல்வியாண்டில் தமிழக அரசால் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடர்பாக, மாவட்டம் வாரியாக மடிக்கணினி திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகளின் தகவல் வேண்டி பெறப்பட்ட மனுவிற்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6 (3) இன் கீழ் , வரிசை எண் 1 முதல் 4 வரையிலான தகவல்களுக்கு பதில் வழங்கும் பொருட்டு பெறப்பட்ட மனுவின் நகல் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

தங்கள் மாவட்டத்தில் மடிக்கணினி 2017–2018 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்ட விவரத்தினை மனுதாரருக்கு வழங்கிவிட்டு அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

இணைப்பு.மனுவின் நகல்.

9/1/2026

பொதுதகவல் வழங்கும் அலுவலர்
மற்றும் உதவி இயக்குநர்
(சுற்றுச்சூழல்)

09/01/2026

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்:
திரு.சூரிய பிரகாஷ்
4/258–A, கிழக்குத் தெரு, எலையமுத்தூர்,
உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| **Registration No. :** | | **Receipt :** | |
| **Type of Receipt :** | Electronically Transferred from Other Public Authority | **Language of Request :** | English |
| **Name :** | Surya Prakash | **Gender :** | Male |
| **Address :** | 4/258-A,East Street, Elayamuthur, Udumalpet , Tirupur, Pin 642154 | | |
| **State :** | Tamilnadu | **Country :** | India |
| **Phone No. :** | +91-8778117710 | **Mobile No. :** | +91-8778117710 |
| **Email :** | sp1706smart@gmail.com | | |
| **Status(Rural/Urban) :** | Rural | **Education Status :** | Graduate |
| **Letter No. :** | Details not provided | **Letter Date :** | Details not provided |
| **Is Requester Below Poverty Line ? :** | No | **Citizenship Status** | Indian |
| **Amount Paid :** | 0 | **Mode of Payment** | Payment Gateway |
| **Mode(s) of information Supply :** | Hard Copy | | |
| **Does it concern the life or Liberty of a Person ? :** | Details not provided. | **Request Pertains to :** | G.KAMATCHI |

**Information Sought :** தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005 விண்ணப்பம் (RTI APPLICATION) அனுப்புநர் : சூர்யபிரகாஷ், 4/258-A, கிழக்குத்தெரு, எலையமுத்தூர், திருப்பூர் மாவட்டம், 642154, தமிழ்நாடு. பெறுநர் : பொது தகவல் அலுவலர் (Public Information Officer), மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் / பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு அரசு. பொருள் : 2017–2018 ஆம் கல்வியாண்டில் தமிழக அரசின் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடர்பாக தகவல் பெறுதல் Reference / குறிப்பு : e-way petition no Dated 29.07.2024, SCHOO/R/2024/60445 மரியாதைக்குரிய ஐயா / அம்மையீர், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ், 2017–2018 ஆம் கல்வியாண்டில் தமிழக அரசால் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்பட்ட இலவச மடிக்கணினி திட்டம் தொடர்பாக கீழ்க்காணும் தகவல்களை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். 1) தமிழகம் முழுவதும்: 2017–2018 ஆம் கல்வியாண்டில் மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த இலவச மடிக்கணினிகளின் எண்ணிக்கையை (ஆண் / பெண் பிரிவுடன்) வழங்கவும். 2) மாவட்டம் வாரியாக: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக, 2017–2018 ஆம் கல்வியாண்டில் எத்தனை இலவச மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற பட்டியலை வழங்கவும். 3) திருப்பூர் மாவட்டம் – பள்ளி வாரியாக: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் வாரியாக, 2017–2018 ஆம் கல்வியாண்டில் • எத்தனை மாணவர்களுக்கு • எத்தனை மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி

Scanned with CamScanner

வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை வழங்கவும். 4) ஒதுக்கீடு மற்றும் நிலுவை: 2017–2018 கல்வியாண்டிற்காக மடிக்கணினிகள் * அரசால் ஒதுக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை * வழங்கப்பட்ட எண்ணிக்கை * இன்னும் வழங்கப்படாமல் இருப்பது எத்தனை என்பதை தெரிவிக்கவும். 5) நிலுவை தொடர்பான ஆவணங்கள்: இன்னமும் வழங்கப்படாமல் இருப்பதற்கான அரசாணை / அலுவலக ஆணை / பதிவுகள் (Records) இருந்தால், அவற்றின் நகலை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். 6) வழிகாட்டு நெறிமுறைகள்: 2017 – 2018 கல்வியாண்டில் இலவச மடிக்கணினி வழங்குவதற்காக வெளியிடப்பட்ட * அரசாணைகள் (G.O) * தகுதி விதிமுறைகள் * வழிகாட்டுதல் நெறிமுறைகள் ஆகியவற்றின் நகலை வழங்கவும். மேற்கண்ட தகவல்கள் அரசு பதிவுகள் மற்றும் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுகிறேன். தேவைப்பட்டால் புகைப்பட / நகல்களுக்கான கட்டணத்தையும் செலுத்தத் தயாராக உள்ளேன். நன்றி. இப்படிக்கு, ஒப்பம் . சூரியபிரகாஷ் பெயர் : சூரியபிரகாஷ் தேதி : 23.11.2025 முகவரி : 4/258-A, கிழக்குத் தெரு எலையமுத்தூர், உடுமலைபேட்டை, திருப்பூர் மாவட்டம். மொபைல் எண் : 8778 7710

Date of Reply : 12/12/2025

Reply of RTI Application : தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட மனுவில் கோரிய தகவல்கள் கீழ்கண்டவாறு மனுதாரருக்கு அளிக்கப்படுகிறது. பள்ளிக்கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் கோப்புகள் ஆவணங்களில் பதியப்பட்டுள்ள தகவல்களை மட்டுமே தகவலாக அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தாங்கள் கோரியுள்ள தகவல்கள் சேகரித்து வழங்கும் பட்சத்தில் இவ்வலுவலக மனிதவளம் மிகவும் பாதிக்கப்படும் என்பதை மனுதாரருக்கு தெரிவிப்பதோடு தங்களுக்கு பொதுநலன் பயனிக்க கூடிய எவையேனும் தகவலை மட்டும் குறிப்பிட்டு கூறி தகவல் கோரினால் மனுதாரருக்கு வழங்கப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது.

[Print] [Close]